உயர்கல்வி (ஜி1) துறை
தலைமைச் செயலகம், சென்னை–9

கடித எண்.17123/ஜி1/2012–2, நாள். 18.9.2012

அனுப்புநர்
திரு. கோ. கோபால், பி.எஸ்ஸி.,
அரசு துணைச் செயலாளர்

பெறுநர்
கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–1/5/35
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
மாவட்ட கருவூல அலுவலர்/கருவூல அலுவலர்/சார்நிலை கருவூல அலுவலர்
பொன்னேரி/செங்கல்பட்டு/திருத்தணி/வேலூர்/குடியாத்தம்/செய்யார்/திருவண்ணாமலை/ கடலூர்/விழுப்புரம்/திண்டிவனம்/ விருத்தாசலம்/சிதம்பரம்/சேலம்/நாமக்கல்/ராசிபுரம்/ஆத்தூர்/தருமபுரி/கிருஷ்ணகிரி/கோயம்புத்தூர்/திருப்பூர்/உடுமலைப்பேட்டை/உதகமண்டலம்/தஞ்சாவூர்/கும்பகோணம்/திருவாரூர்/மன்னார்குடி/திருச்சி/அரியலூர்/கரூர்/முசிறி/புதுக்கோட்டை/ மேலூர்/ராமநாதபுரம்/பூலாங்குறிச்சி/ சிவகங்கை/காரைக்குடி/வாலாஜாப்பேட்டை/ மயிலாடுதுறை/ திண்டுக்கல்/திருநெல்வேலி/பர்கூர்/பரமக்குடி/நிலக்கோட்டை.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18.

அய்யா,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள 3638 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா தற்காலிக பணியிடங்களில் பணிபுரிபவர்களுக்கு செப்டம்பர் 2012 மாதத்திற்கான சம்பள அனுமதி – வழங்கப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.59, உயர்கல்வி(ஜி1)த்துறை, நாள் 24.3.2011.
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண் 53527/என்1/2011–4, நாள் 6.9.2012.

*******

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள 3638 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா தற்காலிக பணியிடங்களுக்கு, 1.1.2010 முதல் 31.12.2011 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது. இப்பணியிடங்களுக்கு 1.1.2012 முதல் தொடர் நீட்டிப்பு வழங்குதல் குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.